இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“இயேசு நின்று, “அவரைக் கூப்பிடுங்கள்” என்று கூறினார். அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு, “துணிவுடன் எழுந்து வாரும், இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்” என்றார்கள். அவரும் தம் மேலுடையை எறிந்துவிட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார். இயேசு அவரைப் பார்த்து, “உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” என்று கேட்டார். பார்வையற்றவர் அவரிடம், “ரபூனி, நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்” என்றார். இயேசு அவரிடம், “நீர் போகலாம்; உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று” என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார். (மாற்கு 10:49-52)

# கிறிஸ்தவ ஒன்றிப்பு திருவிழிப்பு வழிபாட்டில் பங்கேற்றார் திருத்தந்தை

வத்திக்கான்: 1962 அக்டோபர் 11 அன்று கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான நுழைவாயிலாகத் திகழ்ந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் தொடங்கப்பட்ட நாளையும், திருத்தந்தை புனித 23ஆம் யோவான் அவர்களின் திருவிழாவையும் முன்னிட்டு, தைஷ் குழுவினரால் வழிநடத்தப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு திருவிழிப்பு வழிபாட்டில் பங்கேற்று தலைமையேற்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்டோபர் 11 வெள்ளிக்கிழமை உரோம் உள்ளூர் நேரம் மாலை 7 மணியளவில் வத்திக்கானின் Protomartiri வளாகத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு திருவிழிப்பு வழிபாட்டில் 16ஆவது உலக ஆயர் மாமன்றத்தின் பங்கேற்பாளர்கள் மற்றும் பிற கிறிஸ்தவ அமைப்புக்களின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த வழிபாடானது மெழுதிரி ஏந்திய பவனியுடன் வத்திக்கான் ஆறாம் பவுல் அரங்கத்தில் இருந்து தொடங்கி, Protomartiri வளாகத்தில் முடிவடைந்தது.

அமைதியை வலியுறுத்தும் பாடல் ஒன்று குழுவாகப் பாடப்பட நான்கு சிறுமிகள் மத்தியில் ஒரு பெண் இறைவார்த்தையை ஏந்தி வர கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிப்பதற்கான திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் Kurt Koch அவர்கள் லூமன் ஜெண்டியும் என்னும் திருஅவைக் கோட்பாடு வெளியிடப்பட்டதன் 60ஆம் ஆண்டு மற்றும் Unitatis Redintegratio என்னும் கிறிஸ்தவ ஒன்றிப்புக் கோட்பாடு விளக்கம் பற்றியும் எடுத்துரைத்தார்.

இறைவாக்கினர் எசாயா நூலில் உள்ள பகுதி வாசித்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருப்பாடல் 122 பாடப்பட்டது. யோவான் நற்செய்தியில் உள்ள கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்றாக என்ற இறைவார்த்தைகளைத் தொடர்ந்து சீனம், போர்த்தகீசியம், சுவாஹிலி, அரபு, மலையாளம் ஆகிய மொழிகளில் சிறிய இறைவார்த் தைகள் வாசித்தளிக்கப்பட்டன.



சற்று நேர ஆழ்ந்த அமைதிக்குப் பின் பசிதாகமுடையவர்கள், நோயாளிகள், சிறையில் இருப்பவர்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் நம்பிக்கையை இழந்த அனைவருக்குமான ஆவியின் பணியில் ஒன்றிப்பைப் புதுப்பிக்க நம்பிக்கையாளர் மன்றாட்டுக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

Focolare இயக்கத்தின் தலைவர் Margaret Karram மற்றும் Taizé சமூகத்தின் முன்னாள் தலைவர் சகோதரர் அலோயிஸ் ஆகியோர் இந்த திருவிழிப்பு வழிபாட்டில் இணைந்தனர். இறுதியாக விண்ணகத் தந்தையை நோக்கிய செபமானது அனைவராலும் ஒன்றிணைந்து செபிக்கப் பட்டதைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது அப்போஸ் தலிக்க ஆசீரை அனைவருக்கும் வழங்கினார்.

இத்துடன் கிறிஸ்தவ ஒன்றிப்பு திருவிழிப்பு வழிபாடானது நிறைவுற்றது.

கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய ஆர்வத்தையும் ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்கத் திருச்சபையில் ஏற்படுத்தியவர் "கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை" எனப் பெயர்பெற்ற 23ஆம் யோவான் ஆவார். தமது ஆட்சியின் துவக்கத்திலிருந்தே அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பில் தனிப்பெரும் அக்கறை காட்டினார். ஒன்றிப்புப் பணிகளை ஊக்குவித்து நெறிப்படுத்த உரோமையில் அவர் "கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகத்தை" நிறுவினார். தமது எளிமை, இனிமை, மனத்தாழமை எனும் பண்புகளால் "எதிர்பாளர்கள்" எனக் கருதப்பட்ட ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் "சகோதரர்களாக" அணைத்துக் கொண்டார். அவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்யபோது அதன் முக்கிய ஒரு நோக்கமாக கொண்டிருந்தது கிறிஸ்தவ ஒன்றிப்பே.

## யூபிலி 2025 –ம் ஆண்டுக்கான இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச் சுடரும், உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய' எம்மில் தூண்டி எழுப்புவதாக!

அதே அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

## பாரிட் புந்தாரில் பழைய ஆலயம் மறுசீரமைப்புக்காக மூடப்பட்டது

பாரிட் புந்தார்: இங்கு அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை ஆலயம் எதிர்நோக்கும் நீர் கசிவு மற்றும் வெள்ளம் போன்ற தொடர்ச்சியான பிரச்சனைகளைத் தீக்க வழிவகுக்குப் பொறுட்டு, மறுசீரமைப்புக்காக ஆலயம் அதிகாரப் பூர்வமாக மூடப்பட்டது.

இவ்வாலயத்தில் அதன் இறுதி திரப்பலி கடந்த செப்டம்பர் மாதம் 29-ம் திகதி கொண்டாடப்பட்டதாக அதன் பங்குத் தந்தை அருள்பணி மார்ட்டின் அருளாந்து அவர்கள் தெரிவித்தார். அன்றைய இறுதி திருப்பலி சமூகத்திற்கு பெரும் கவலையும் சோகமும் கலந்தத் தருணமாக வெளிப் பட்டது. திருப்பலியின் போது, இறை மக்களில் பலர் அவர்கள் அந்த ஆலயத்தில் பெற்ற திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருமணம் போன்ற அருளடையாளங் களை நினைவுகூர்ந்து கண் கலங்கினர்.

அன்று பங்கு மக்களில் வயது முதிர்ந் தோர் அழைக்கப்பட்டு, ஒரு சகாப்தத்தின் இறுதியை எடுத்துரைக்கும் வகையில், ஆலயக் கதவை ஒருவர் ஒருவராக மூடினர். அதே வேளையிலே இறைமக்கள் இளையோர் முன் செல்ல பவனியாக ஆலயத்தை விட்டு வெளியேறினர்.



*பழைய ஆலய இறுதித் திருப்பலியில்....*

மேலும், அன்று வருகைத் தந்தோர் அவரவர் கட்டை விரல் ரேகைப் பதிப்பை ஓர் அட்டையில் பதிவுச் செய்தனர். அந்த அடையானது அடுத்து எழுப்பபப்படவுள்ள ஆலயத்தில் பதிக்கப்படும். இது அப்பங்கின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கும் என்று அறிவிக் கப்பட்டது.

# வத்திக்கனில் இன்று நிறைவுப் பெறுகிறது ஆயர் பேரவையின் இரண்டாம் அமர்வு

வத்திக்கானில் கடந்த அக்டோபர் 2 முதல் 27, 2024 வரை நடைபெற்று வந்த ஆயர்களின் ஆயர் பேரவையின் இரண்டாவது அமர்வு, இன்று முடிவடைறது, இந்த அமர்வின் கருப்பொருள் கூட்டொருங்கியக்கத் திருஅவையாக: ஒன்றிப்பு, பங்கேற்பு, மறைபரப்பு என்பதாகும்.

ஆயர் மாமன்றக் கூட்டம் என்பது, இறைவார்த்தை மற்றும் தூய ஆவியானவருக்கு செவி கொடுக்கின்ற நேரம் என்றும், திருஅவையின் பாவங்களுக்காக இறைவனிடம் மன்றாட ஒரு வாய்ப்பு என்றும், அக்டோபர் 2 முதல் 27 வரை உரோமையில் நடைபெற்று இன்று நிறைவுபெறும் ஆயர் மாமன்ற 16வது பொதுப்பேரவையின் 2வது அமர்வைக் குறித்து உலக ஆயர் மாமன்ற தலைமைச் செயலகத்தின் பொதுச் செயலர் கர்தினால் Mario Grech அவர்கள் செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.



272 ஆயர்கள் மற்றும் 96 ஆயர் அல்லாதவர்கள் உட்பட 368 வாக்களிக்கும் உறுப்பினர்களைக் கொண்ட இந்த இரண்டாவது அமர்வில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை, முதல் அமர்வில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையைப் போன்றது என்று உலக ஆயர் மாமன்ற பொது தொடர்பாளர், கர்தினால் Jean-Claude Hollerich விளக்கினார்.

இயேசு தன் திருத்தூதர்களுடன் எருசலேம் நோக்கி இணைந்து வழிநடக்கின்றார். அப்படி வழிநடக்கும்போது அவருடன் மக்கள் கூட்டமும் இணைகின்றது. ஆக, திருஅவை என்பது 'கூட்டம்-திருத்தூதர்கள்-இயேசு' என்னும் குழுமத்தைக் குறிக்கிறது. இந்தக் குழுமத்தில் மூன்று பேரும் இணைதல் வேண்டும். கூட்டம் இல்லாமல், திருத்தூதர்களும் இயேசுவும் மட்டும் இருந்தால் திருஅவை என்பது தனிப்பட்ட ஒரு கருத்தியல் எனச் சுருங்கிவிடும்.

திருத்தூதர்கள் இல்லாமல் கூட்டமும் இயேசுவும் மட்டும் இருந்தால் அது வெறும் சமயமாக மாறிவிடும். இயேசு இல்லாமல் திருத்தூதர்களும் கூட்டமும் மட்டும் இருந்தால் அது வெறும் கொள்கையளவில் கூடிய கும்பலாக மாறிவிடும். கூட்டம்-திருத்தூதர்கள்-இயேசு என்னும் இணைதலே திருஅவையை உருவாக்குகின்றது. மேலும், இவர்கள் ஒரே இடத்தில் நிற்கவில்லை. மாறாக, இணைந்து நடக்கின்றனர். துன்புறும் ஊழியன் தன் துன்பம் ஏற்றலின் வழியாக மற்றவர்களுடன் பயணம் செய்கின்றார்.

இயேசு கடவுள் நிலையிலிருந்து மனித நிலைக்கு இறங்கி வந்ததும், நமக்கு இரக்கம் காட்டித் தன் உயிரை ஈந்து சிலுவையில் இறந்ததும் ஒரு பயணமே. இணைந்து நடத்தல் என்பது பயணத்தையும், வளர்ச்சியையும், இலக்கு நோக்கிய தெளிவையும் குறிக்கிறது.

இன்று நாம் இணைந்து நடக்கும் இந்தப் பயணத்தில் நம் துணைவர்கள் அல்லது இணையர்கள் யார்? இன்று நம் தலத்திருஅவையில் ஆயர், அருள்பணியாளர்கள், துறவியர்கள், இறைமக்கள் என அனைவரும் இணைந்து வழிநடக்கின்றோம். நமக்கு அருகில் இருக்கும் மற்றவர்களும் இந்தப் பயணத்தில் நம்மோடு இணைந்திருக்கிறார்கள்.

### பங்கேற்பு.

'பங்கேற்பு' என்பது நாம் அருளடையாளக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதை அல்ல, மாறாக, பணிநிலைகளில் பங்கேற்பதைக் குறிக்கிறது. பங்கேற்பு எந்தவொரு செயலையும் எளிதாக்குகிறது. ஒரு கரம் தூக்க வேண்டிய சுமையை இரு கரங்கள் இணைந்து தூக்கினால் சுமை எளிதாகிறது. மானிட மகன் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு விலையாகத் தன் உயிரை அளிக்கவும் வந்துள்ளார் எனில், திருத்தூதர்களும் இறைமக்களும் இயேசுவின் இந்த மீட்புச் செயலில் பங்கேற்பாளராக அமைகின்றனர்.

# கத்தோலிக்கத் திருஅவையில் பெண் திருத்தொண்டர்கள்- காலம் கனியவில்லை

வத்திக்கானின் கோட்பாட்டு அலுவலகத்தின் தலைவரான கார்டினல் விக்டர் மானுவல் பெர்னாண்டஸின் கூற்றுப்படி, கத்தோலிக்கத் திருஅவை பெண்கள் திருதொண்டர்களாக இருக்க இன்னும் காலம் கனியவில்லை. பெண்களுக்கு திருத்தொண்டர் அருள்பொழிவை அனுமதிக்க விரைவதானது அருள்பொழிவுச் செய்யப்பட்ட பணியாளர்களுக்கும் பொதுநிலை தலைமைத்துவத்திற்குமிடையே இடையிலான உறவு பிரதிபலிப்புக்குத் தடையாக இருக்கும் என்று அவர் கூறினார். பெண் திருத்தொண்டர்கள் பற்றியத் தேவையை திருத்தந்தை இப்போதைக்கு முதிர்ச்சியானதாக கருதவில்லை என்றும் அவர் கூறினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் பெண்களை அருள்பணியாளர்களாக (குருக்களாக) நியமிப்பதை நிராகரித்து, அவர்கள் திருத்தொண்டர்கள் அருள்பொழிவுக்கும் தடைவிதிப்பதாகத் தெரிகிறது. இருப்பினும், அவர் பெண்களுக்கு சில வாய்ப்புக்களைத் திறந்துள்ளார், அதாவது திருப்பலியில் இறைவார்த்தை அறிக்கையிடுவதை அனுமதிப்பது, பலிபீட சேவகர்களாகப் பணியேற்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த ஆண்டு நிகழ்ந்த 2023-ம் ஆண்டு ஆயர்களின் ஆயர் பேரவைக்குப் பிறகு, ஆயர் பேரவையின் போது எழுப்பப்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்களைப் பற்றி சிந்திக்க 10 ஆய்வுக் குழுக்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் அமைத்தார்.



கர்தினால் விக்டர் மானுவல் பெர்னாண்டஸ்

இக்குழுக்கள்ஆய்வுக்குப் பின் சினாட் உறுப்பினர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தன. மேலும் பிரச்சினையை ஆய்வு செய்ய மற்றொரு குழுவை அமைத்துள்ளர். இக்குழு 2025ல் பெண் திருத்தொண்டர் அருள்பொழிவு குறித்த அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்

# சிரம்பானில் 'உடலின் இறையியல்' சிறப்பு பயிலரங்கம் நடைபெற்றது

"நல்ல கனிகளைத் தரவேண்டுமெனில், மரம் நல்ல மரமாய் இருக்க வேண்டியது அவசியம். அத்திமரத்தில் திராட்சைப் பழங்கள் விளைவதில்லை. அரளிச் செடியில் ஆம்பல் மலர் பூப்பதில்லை.

இந்த 'உடலின் இறையியல்' பயிலரங்கத்தில் பெற்றோர்களிடையே நிகழ்ந்தக் கருத்து பரிமாற்றத்தில், பிள்ளைகள் வளர்வது நம் முன்மாதிரியைப் பின்பற்றியே அமைகிறது என்ற கருத்து மேலோங்கி இருந்தது.

கடவுள் நமக்களித்த பணியில் எந்த அளவுக்கு அர்ப்பணிப்போடும், பொருள்படவும் செயல்படுகிறோமோ அந்த அளவுக்கு கடவுள் நம்மை நம் பிள்ளைகளை வளர்ப்பதற்கும் பயன்



*பயிலரங்கத்தில் பங்கேற்றோர்*

படுத்துகிறார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்பது உண்மை. பெற்றோர்களாகிய எங்களுக்கு பிள்ளைகளோடு அன்பாக பயணம் செய்யும் முறைகள் விளக்கப்பட்டதை நன்கு உணர்ந்தோம்.

இறுதியாக நம் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவை மையமாக வைத்து நம் பிள்ளைகளை அக்கறையோடு வளர்க்க வேண்டும் என்பதையும் பெற்றோரே பிள்ளைகளுக்கு முதன்மையான ஆசிரியர்கள் என்பதையும் அன்று புரிந்துகொண்டோம்.

-அந்தோணியம்மாள் @ என்

# அழைத்தால் தாவீதின் மகன் நமக்கும் இரங்குவார்!

இன்று பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு. நம் பார்வையை சரி செய்ய நாம் அழைக்கப்படுகிறோம். முதல் வாசகமானது, இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் அருளவிருக்கும் மீட்பை எடுத்துரைக்கின்றது. ஆண்டவரே இஸ்ரயேலின் தந்தை என்றும், அழுகையில் ஆறுதலளிப்பவர் என்றும் மீட்பை அருளுபவர் என்றும் எரேமியா இறைவாக்கினர் எடுத்துரைக்கிறார்.

அடுத்து வரும் இரண்டாம் வாசகத்தில் பவுல் அடியார் தலைமைக்குருவாகிய இயேசு கிறிஸ்து முதல், இன்று நம்மிடையே, நமக்காக பலி நிறைவேற்றும் ஒவ்வொரு அருள்பணியாளரும் மக்கள் சார்பாக கடவுள் முன் பணிபுரிய கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று குருத்துவத்தின் மேன்மையை நமக்கு நினை

மருத்துவ துறையில் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ள இவ்வுலகில், நம் பார்வைக்குறைபாடுகளை சரிசெய்ய, கண் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருத்துவம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. ஆனாலும், அன்று பர்த்தமேயுவின் பார்வையை குணப்படுத்திய இயேசு, நம் கண் பார்வையை அல்ல, எண்ணப் பார்வையை, சிந்தனையை, செயலைச் சரி செய்ய அழைக்கின்றார். பார்வையற்ற பர்த்தமேயு, இயேசுவின் மீது கொண்ட பார்வையும், இயேசு பர்த்திமேயுவின் மீது கொண்ட பார்வையும் நம்பிக்கை எனும் பார்வை தான்.

அருகில் இருந்தோரின் அடக்குமுறைகளையும் தாண்டிய அவரது கூக்குரல் இயேசுவின் பார்வையை திசை திருப்பியது, அவரை அதட்டிய உலகத்தின் சத்தங்களுக்கு செவி கொடுக்காமல், தாவீதின் மகனே குணமாக்கும் என்ற அலறலுக்கு இயேசு செவிசாய்த்தார்.

அங்கே இயேசு இருந்தது பர்த்தமேயுவிற்கு துணிவைத் தந்ததோடு, எழுந்து நடக்க வைத்தது, குதித்தெழுந்து இயேசுவை நோக்கி ஓட வைத்தது, உலகோரின் பார்வையையும் இயேசுவின் மீதுத் திசை திருப்பியது. நமது பார்ஜ எப்போதும் இயேவில் இருந்தால் நமக்கும் குணமளிப்பு இயல்பாகும். அதே வேளையில் தீமையை நோக்கிய நமது பார்வை சரிசெய்யப்பட வேண்டும் தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்ற பர்த்திமேயுவின் விண்ணப்பக் குரலுடன் ஆண்டவரிடம் ஓடி வர எப்போதும் நம்பிக்கையோடு முயற்சித்தால் நலம் பெருவோம் என்பது உறுதி.

'உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று' என்று இயேசுவின் வார்த்தையினால் உடல் உள்ள நலம் பெற ஏக்கத்தோடும் அவரை நாடுவோர் கைவிடப்படார் என்ற நம்பிக்கை வாக்குறுதியில் நிலைகொள்வோம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி*

**பொதுக்காலம்-30-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எரே 31:7-9 |
| திரு.பாடல் | 126:1-2ab.2cd-3.4-5.6 |
| 2-ம் வாசகம் | எபி 5: 1-6 |
| மாற்கு | மாற்கு 10:46-52 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**